## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

## ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்டார் ! அமைச்சர் துரைமுருகன் முன்னிலை!

# வரலாற்றில் அழியாத முத்திரை பதித்தவர் கலைஞர்!

## பிரதமர் மோடி அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் புகழாரம்!

**சென்னை, ஆக. 19 -**

**சென்னையில் நேற்று, முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழா முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் நாணயத்தை வெளியிட்டு சிறப்புரை ஆற்றினார். தமிழ்நாடு மாநில நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் முன்னிலை வகித்தார்.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழா நேற்று (18.8.2024) நடைபெற்றதையொட்டி பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.







இந்தியாவின் தலை சிறந்த தலைவர்களில் ஒருவரான முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவையொட்டி பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழா நடைபெறவிருப்பது அறிந்து தான் மிகவும் மகிழ்ச்சி அடைவதாகவும், இவ்விழா இந்தியாவின் மிகவும் புகழ்பெற்ற தலைவர்களில் ஒருவரான கலைஞர் அவர்களுக்காக நடைபெறும் முக்கியமான விழாவாகும் என்றும் தெரிவித்துள்ள இந்தியப் பிரதமர் அவர்கள், இந்திய அரசியல், இலக்கியம் மற்றும் சமூகப் பணிகள் ஆகிய பல்வேறு களங்களில் உயர்ந்து விளங்கிய தலைவராக திகழ்ந்த கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டின் வளர்ச்சியிலும், நாட்டின் முன்னேற்றத்திலும் எப்போதும் அக்கறை கொண்டவராக விளங்கினார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு சிறந்த அரசியல் தலைவராக திகழ்ந்த கலைஞர் அவர்கள், மக்களால் பல முறை முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பதவியிலிருந்து சமூக வளர்ச்சி மற்றும் அரசியல் குறித்த அவரது ஆழமான புரிதலை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில் நமது நாட்டின் வரலாற்றில் அழிக்க முடியாத அடையாளத்தை விட்டுச் சென்றுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

பன்முகத் திறமை கொண்ட கலைஞர் அவர்கள், தனது எழுத்துக்களின் மூலம் தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் இன்றும் மக்களால் நினைவுகூரப்படு கின்றன என்றும், அவரது இலக்கிய ஆற்றல், அவரது படைப்புகளின் மூலம் பிரகாசித்தது மட்டுமல்லாமல், அவருக்கு ‘கலைஞர்’ என்ற அன்பான பட்டத்தையும் பெற்றுத் தந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நினைவு நாணயம் வெளியிடப்படுவதன்மூலம், கலைஞர் அவர்களின் நினைவு போற்றப்படுகிறது என்றும், இந்த நினைவு நாணயம் கலைஞர் அவர்கள் பின்பற்றிய கொள்கைகள், மரபுகள் மற்றும் அவரது பணிகளை என்றென்றும் நினைவூட்டுவதாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த முக்கியமான தருணத்தில் கலைஞர் அவர்களுக்கு தனது நெஞ்சார்ந்த அஞ்சலியைச் செலுத்த விரும்புவதாக குறிப்பிட்டுள்ள பிரதமர் அவர்கள், 2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதை நோக்கி நாம் நம்பிக்கை யுடன் நடைபோடும் இந்த வேளையில், கலைஞர் போன்ற தலைவர்களின் தொலைநோக்குப் பார்வையும், சிந்தனைகளும், நம் தேசத்தின் பயணத்தைத் தொடர்ந்து வடிவமைக்கும் என்றும், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழா மாபெரும் வெற்றியடைய தனது வாழ்த்துக்களை தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### பிரதமருக்கு முதல்வர் நன்றி!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழாவையொட்டி பிரதமர் அவர்களின் வாழ்த்துச் செய்திக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நன்றி தெரிவித்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழாவுக்கு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தமது உளங்கனிந்த வாழ்த்து களைத் தெரிவித்தமைக்கும், இந்நிகழ்வு வெற்றிபெற அவரது ஆதரவுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் நன்றியைத் தெரிவித்துள்ளார்.

## பன்முக ஆற்றல் கொண்ட – அற்புதமான ஆளுமை மிக்க தலைவர்!

# ஏழை, எளியோர்க்காக இறுதி வரை பாடுபட்டவர் கலைஞர்!

## கலைஞர் நினைவு நாணய வெளியீட்டு விழாவில் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வரவேற்புரை!

**சென்னை, ஆக.19-**

**கலைஞர் நூற்றாண்டு நாணய வெளியீட்டு விழாவில் கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் உரையாற்றும்போது, “பன்முக மற்றும் அற்புதமான ஆளுமைமிக்க தலைவர்” என்றும், “ஏழை,எளியோர்க்காக இறுதிவரை பாடுபட்டவர் கலைஞர் அவர்கள்” என்றும் பெருமையுடன் கூறினார்.**

நீர் வளத்துறை அமைச்சர் - கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

முதலில் ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கை வரவேற்க இந்த வாய்ப்பை எனக்கு வழங்கியதற்காக நமது முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பாதுகாப்பு அமைச்சர் அவர்களே! உங்களை எங்கள் முதலமைச்சர் சார்பாகவும், தமிழக மக்கள் சார்பாகவும் வரவேற்கிறேன்.

உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழர்களால் அன்புடன் அழைக்கப்படும் “கலைஞர்” அவர்கள், ஒரு பன்முக மற்றும் அற்புதமான ஆளுமை மிக்க தலைவர் ஆவார்கள்.

### ஞானத்தின் மூலம் அதிகஉயரத்திற்கு உயர்ந்தவர்!

அவரது தொடக்க காலம் சாதாரணத் துவக்கமாக இருந்தாலும் தமது கடினமான மற்றும் உண்மையான உழைப்பு மற்றும் அவரது இயல்பான அறிவுக்கூர்மை மற்றும் ஞானத்தின் மூலம் அதிக உயரத்திற்கு உயர்ந்தார். அவர் வசீகரிக்கும் சொற்பொழிவாளர், சிறந்த எழுத்தாளர் மற்றும் சோர்வில்லாத, பெரிய அரசியல் தலைவர்.

அவர் ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலமாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்ப்பேதுமில்லாத தலைவராக இருந்தார். நாட்டில் எங்கும் எந்த அரசியல் கட்சியிலும் இல்லாத மிக அரிதான நிகழ்வு இது.

நமது பேரறிஞர் அண்ணாவால் தோற்றுவிக்கப்பட்ட தி.மு.க., வெறும் அரசியல் கட்சி மட்டுமல்ல, நூற்றாண்டு பழமையான நீதிக் கட்சியில் வேரூன்றிய ஒரு சமூக இயக்கம் ஆகும்.

### அரசியலில் நீண்ட இன்னிங்ஸ் கலைஞர்!

தமிழ் சினிமாவில் நீண்ட இன்னிங்ஸ், அரசியலில் நீண்ட இன்னிங்ஸ், தமிழ் எழுத்துலகில் நீண்ட இன்னிங்ஸ் கொண்டவராக விளங்கியவர் கலைஞர். இலக்கிய அரசியல் கட்டுரைகள், கதைகள், நாவல்கள் மற்றும் கட்சி உடன்பிறப்புகளுக்கு தனது கடைசிக் காலம் வரை கடிதங்கள் தீட்டி இந்தச் சாதனைகளைப் புரிந்தார். அவர் போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி பெற்றார். 1957 முதல் தனது இறுதிக் காலம் வரை, அரை நூற்றாண்டுக்கும் மேலாக 13 முறை தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். 5 முறை முதல்வர் என மொத்தம் 19 ஆண்டுகள் தமிழ்நாட்டின் முதல்வராக இருந்தார்.



முதலமைச்சராக, அவர் பல சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்தினார், அவற்றில் பல நாட்டிலேயே முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டவைகளாகும். அவர் வடிவமைத்த திட்டங்கள் அனைத்தும், தாழ்த்தப்பட்டோர், ஏழைகள் மற்றும் ஏழைகளின் மேம்பாட்டிற்காகவே இருந்தன.

### கலைஞரின் முற்போக்கான திறன்கள்!

மாநிலத்தின் விரைவான வளர்ச்சி. தமிழ்நாட்டின் தற்போதைய நிலை மற்றும் வடிவத்திற்கு கலைஞரின் சிறந்த மற்றும் முற்போக்கான நிர்வாகத் திறன்களே காரணமாகும். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினரின் நலனுக்காகவே அவர் எப்போதும் நின்றாராயினும், அனைவரையும் சமமாகவும் அன்பாகவும் நடத்தினார்.

மாநிலங்களுக்கு சுயாட்சி, தமிழ் மொழிக்கு முதன்மையான நிலை, 3,000 ஆண்டுகள் பழமை - உண்மையான வன்முறையற்ற ஜனநாயகம் மற்றும் மதச்சார்பின்மை ஆகியவை அவரது இதயத்திற்கு மிகவும் பிடித்தமானவை களாகும்.

மனித செயல்பாடுகளின் பல்வேறு துறைகளிலும், நீண்ட மற்றும் இணையற்ற பொது சேவையிலும் அவர் ஆற்றிய குறிப்பிடத்தக்க மற்றும் சிறப்புமிக்க பங்களிப்பை கருத்தில் கொண்டு, மத்திய அரசின் சார்பில், அன்னைத் தமிழின் அன்பு மகனும், தமிழர்களின் பாசப் புதல்வருமான கலைஞரின் நினைவாக நாணயம் வெளியிடப்பட்டுள்ளது.

### எனது வழிகாட்டி தத்துவ ஞானி கலைஞர்!

மாண்புமிகு ராஜ்நாத் சிங் அவர்களே, உங்களுக்கும் எங்களுக்கும் உள்ள சில பொதுவான அம்சங்களைப் பகிர்ந்து கொள்கிறேன். எனது வழிகாட்டியும் தத்துவஞானியுமான கலைஞர், மாநில சுயாட்சிக்கான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல நீதிபதி ராஜமன்னாரை நியமித்தார். அதேபோல, நீங்கள் உத்தரப்பிரதேச முதல்வராக இருந்த போது, அதில் கவனம் செலுத்த ஹூக்கும் சிங்கை நியமித்தீர்கள்.

பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற ஒடுக்கப்பட்ட சமூகங்களின் நலன், தலைமைத்துவம் மற்றும் சேவைக்கான எங்கள் அணுகுமுறைகளோடு உங்களின் கொள்கைகளும் ஒத்துப்போவதை எண்ணி நான் மிகவும் மகிழ்வதுண்டு.

### ஜனநாயகத்தைக் காக்க சிறையிலிருந்தவர்கள்!

நமக்கிடையிலான மற்றொரு பொதுவான விஷயம் என்னவென்றால், மாணவர்களாக இருந்தபோதே நமது அரசியல் வாழ்வைத் தொடங்கியவர்கள் ஆவோம். உத்தரப்பிரதேசத்தின் கல்வி அமைச்சராக, நீங்கள் மோசடி தடுப்பு நடவடிக்கைகள் போன்ற முக்கிய முடிவுகளைச் செயல்படுத்தினீர்கள், இது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டால், நீட் போன்ற தேர்வுகளில் இன்று நாம் காணும் பல முறைகேடுகளைத் தடுத்திருக்கலாம்.

தமிழக முதல்வருக்கும் உங்களுக்கும் இடையே பகிரப்பட்ட வரலாறும் உள்ளது. எமர்ஜென்சி காலத்தில், நீங்கள் இருவரும் ஜெயப்பிரகாஷ் நாராயணின் வழியைப் பின்பற்றி, 18 மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தீர்கள், ஜனநாயகம் மற்றும் நீதிக்கான உங்கள் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு இது சான்றாகும்.

### பாதுகாப்பு அமைச்சருக்கு மனமார்ந்த நன்றி!

மத்திய பாதுகாப்பு அமைச்சரை வரவேற்கும் அதே வேளையில், இன்று நாணயத்தை வெளியிடுவது எனும் மகத்தான முடிவை எடுத்ததற்காக பாதுகாப்பு அமைச்சருக்கும், இந்திய அரசாங்கத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் ஒருமுறை உங்களை மனதார வரவேற்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசினார்.

---

### ராஜா தமிழ்மாறன் புகழ் அஞ்சலி உரை!

## குவைத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு புகழ் அஞ்சலி! விருதுகள் வழங்கல்!

### எம்.பாவாசா - ராமதாஸ் - இராணிப்பேட்டை கிளாட்வின் பாக்கியராஜ் - ஜாகீர் உசேன் பங்கேற்பு!

*குவைத், ஆக. 19-*

குவைத்தில் தமிழின தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ம் ஆண்டு புகழ் அஞ்சலி நிகழ்ச்சி மேட்டுப்பட்டி MRM நபில் ராஜா ஒருங்கிணைப்பில் பாவாசா தலைமையில் சிறப்பு விருந்தினர் BIKE Riders ராஜா தமிழ் மாறன் காணொலி வாயிலாக கலந்து கொண்டு தமிழ் நாட்டின் தலைமகன் மு.க ஸ்டாலின் தலைமையிலான நல்லாட்சியின் பெருமைகளை நலத்திட்டங்களை மக்கள் மத்தியில் நாம் எடுத்து செல்லவேண்டிய அவசியத்தையும் எதிர் வரும் ஊரக உள்ளாட்சி தேர்தலிலும் 2026 சட்டமன்ற தேர்தலிலும் தி.மு.க. தலைமையிலான அணி வெற்றி பெற வேண்டும். அதற்கு புலம் பெயர் தமிழர்கள் கழக தோழர்கள் எப்படி செயல்பட வேண்டும் என விளக்கமாக உரையாற்றினார், சிறப்பு விருந்தினர் ராஜா தமிழ்மாறன் முன்னிலையில் சமூக ஆர்வலர் வேலூர் ஜான் ரமேஷ் முகமது நாசர் சாமி மங்கலேஸ்வரன் ஸ்டீபன் ரொசாரியோ வெங்கடேசன் முனிசாமிசக்திவேல் அழகர்சாமிதண்டபாணிசண்முகம் துரைமுருகன் சஜாத்து அலிகான் முகமது சிராஜுதீன் கருப்பையா பிரபாகரன் சங்கர் சண்முகம் வெங்கடேஷ் அமுதா மார்ட்டின் அசோக் குமார் அர்ஜுனன் உள்ளிட்ட 30 கழக உடன்பிறப்புகளுக்கு கலைஞர் 2024 விருதுகள் வழங்கி கவுரவிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் அனைத்து அரசியல் கட்சி நிர்வாகிகளும் உடன்பிறப்புகளும். மற்றும் சமூக ஆர்வலர்களும் திராவிட சிந்தனையாளர்களும் கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தினர் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் அமைப்புச் செயலாளர் ராஜா முஹம்மது நன்றி உரையாற்றினார்.

---

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. பங்கேற்பு! ஆலந்தூர் சட்டமன்ற தொகுதி கோவூர் ஊராட்சியில்

## பேருந்துப் பணிமனை திறப்பு விழா - புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கம்!

### அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன் - சா.சி.சிவசங்கர் சிறப்புரை! படப்பை மனோகரன் முன்னிலை! வந்தேமாதரம் அறிக்கை!

*சென்னை, ஆக.19-*

குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் கோவூர் ஊராட்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் - கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின், அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியில், ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு நிதி திட்டத்தின்கீழ், இன்று (19.8.2024, திங்கட்கிழமை) மாலை 4.00 மணியளவில் ரூபாய் 45 லட்சம் மதிப்பீட்டில், கோவூர் EB பேருந்து நிலைய பணிமனை திறப்பு விழாவிற்கும், 7 புதிய வழித்தடங்களில் பேருந்துகளை துவக்கத்திற்கும், நம் மக்களின் தேவை அறிந்து, சொன்னதை செய்து, தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றிய அமைச்சர் தா.மோ.அன்பரசன், போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர். படப்பை. ஆ.மனோகரன் முன்னிலையில் குன்றத்தூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் ஒன்றிய குழு, துணை பெருந்தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம் ஆகியோர் கலந்து கொள்ள இருப்பதால் மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித் திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.